தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் 3 நாட்கள் நடைபெறும் ஆடிப்பெருக்கு விழாவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்து,301 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி,எம்.எல்.ஏ ஜி.கே.மணி,முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் மாவட்ட செயலாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன்,தடங்கம்.பெ.சுப்ரமணி,மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,கோட்டாச்சியர் காயத்ரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உடல் உறுப்புக் கொடையில்

தமிழ்நாடு முதன்மை மாநிலமாகி இருப்பது கூடுதல் சிறப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 3-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு

உயிர் பிரிந்த பின் தமது உடற்பாகங்கள் தீக்கும் மண்ணுக்கும் இரையாகாமல், பிறரது வாழ்வுக்குத் துணையாவதே பெருவாழ்வு!

அதனால்தான், துணை முதலமைச்சராக இருந்தபோது, எனது உடலுறுப்புகளைக் கொடையளித்தேன்; முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், உடலுறுப்புகளைக் கொடையளிப்போருக்கு அரசு மரியாதையுடன் விடை கொடுக்கப்படும் என்று அறிவித்தேன்.

2023 செப்டம்பர் 23இல் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல், இதுவரையில் 479 பேர் (கடந்த ஆண்டு மட்டும் 268 பேர்) தங்களது உடலுறுப்புகளை ஈந்து, பல நூறு உயிர்களை வாழ வைத்திருக்கிறார்கள்! அவர்களுக்கு எனது வணக்கம்!

உடலுறுப்புக் கொடையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகி இருப்பது கூடுதல் சிறப்பு!

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

சுயமரியாதையைக் காக்க தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகி விட்டோம் என

ஒ.பி.எஸ். அறிவிப்பு காலம் கடந்த முடிவு என்றாலும், இன்றைய காலத்திற்கு உகந்த முடிவு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.3-

"நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்றார் அண்ணா. அதன்படி "சுயமரியாதையைக் காக்க தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகி, வெளியேறிவிட்டோம்!'' என்ற ஒ.பி.எஸ். தலைமையிலான அ.தி.மு.க. அணியின் அறிவிப்பு - சற்று காலம் கடந்த முடிவு என்றாலும், 'இன்றைய காலத்திற்கு உகந்த முடிவு!' என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அ.தி.மு.க.வில் மேனாள் முதலமைச்சராகவும், பிறகு துணை முதலமைச்ச ராகவும், பிறகு எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. ஆன பிறகு, பொறுப்புகளில் இருந்தவரும், 'ஒ.பி.எஸ்.' என்று எல்லோராலும் அழைக்கப்படுபவருமான பண்பாளர் அன்புச் சகோதரர் ஒ.பன்னீர்செல்வம் அவர்களும், அவர்கள் தலைமையில் 'அண்ணா தி.மு.க. உரிமை மீட்புக் குழு' என்ற பெயரில் இயங்கி வந்த நிலையில், பா.ஜ.க. தலைமையில், பிரதமர் மோடி தலைமையில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து வெளியேறுகிறோம் என்ற அறிவிப்பைக் கண்டோம்.

'சுயமரியாதையைக்' காக்க வெளியேறுகிறோம்!

அதற்கு முதல் நாள் எனது கெழுதகை நண்பரும், பெரியாரிஸ்ட்டும், ஒ.பி.எஸ். அவர்களது அமைப்பின் ஆலோசகருமான 'பண்ருட்டியார்' என்று பலராலும் அழைக்கப்படும் தோழர் பண்ருட்டி எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், "ஒ.பி.எஸ். தலைமையிலான அணி, மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியி லிருந்து விலகி, வெளியேறி விட்டோம்" என்று கூறியுள்ளதோடு, 'சுயமரியாதையைக்' காக்க என்று இணைத்துக் கூறி, ஒரு சரியான முடிவெடுத்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

மீண்டும் சரியான பாதையில் பயணிக்கின்ற வாய்ப்பு!

இனி, ஒ.பி.எஸ்.சும், அவர்தம் அமைப்பும், அண்ணா தி.மு.க. உரிமை மீட்பு என்பதையும் தாண்டி, தமிழ்நாட்டு நலன், உரிமைகளை மீட்டெடுக்க, திராவிடப் பண்பாட்டுக்கும், கொள்கைகளுக்கும், லட்சியங்களுக்கும் இப்போது ஏற்பட்டிருக்கும் கபளீகர முயற்சிகளையும் முறியடித்துள்ளது வரவேற்கத்தக்கதே!

எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை அப்படியே முழுமையாக விழுங்கிவிட, முழு ஆயத்தமாகி வரும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. படையெடுப்பை அறவே முறியடிக்கும் முக்கிய கடமைகளைத் தேர்தல் அரசியல் என்பதிலும் செய்வதன்மூலம், மீண்டும் சரியான பாதையில் பயணிக்கின்ற சிறப்பினைப் பெற வாய்ப்பு அவருக்கும், அவரது அமைப்பினருக்கும் இதன் மூலம் ஏற்படலாம்.

எம்.ஜி.ஆர். எதிர்த்த தி.மு.க.வுடன் நெருங்கலாமா? என்று மலிவாகச் சிலர் கூறக் கூடும்; தி.மு.க.வோடு அ.தி.மு.க.வை இணைக்கும் முயற்சி நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியுமா? எம்.ஜி.ஆர். அவர்கள்தான் முதல் முயற்சி எடுத்தார் எனது மூலமாக. ஒரிசா முதலமைச்சர் பிஜு பட்நாயக் அடுத்த முயற்சியையும் எடுத்தார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் இசைவு தந்தார் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்; எல்லாம் சரியாகப் பயணித்த நிலையில், அப்போதைய டில்லியின் தலையீட்டால், கடைசிக் கட்டத்தில் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

சட்டமன்றத்திலேயே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் "தி.மு.க. அல்லது அ.தி.மு.க.தான் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும்" என்று கூறியதையும் இப்போதும் நினைவூட்டுகிறோம்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் அநாகரிகமாக நடந்துகொண்ட ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்!

முன்பு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து டில்லி சென்று, தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்தபோது, மண்டைக்காடு கலவரத்தையொட்டி அவருக்கு எதிராகக் கோஷம் போட்ட டில்லி ஆர்.எஸ்.எஸ்.காரர்களை அழைத்துப் பேசிக் கொண்டிருந்த நிலையில், அவரது கையை முறுக்கி, அவரிடம் அநாகரிகமாக நடந்து கொண்டபோது, அதைக் கண்டு வெகுண்டவர் உடனிருந்த அமைச்சர் தோழர் பண்ருட்டி எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் என்பதை, இன்றைய மோடி, அமித்ஷா, ஆர்.எஸ்.எஸ். சிடம் அ.தி.மு.க.வை அடகு வைத்தவர்களும், இளந்தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டியதொரு பழைய நிகழ்வாகும்.

இன்றைய காலத்திற்கு உகந்த முடிவு!

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல், "நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்."

சற்று காலம் கடந்த முடிவு என்றாலும், இன்றைய காலத்திற்கு உகந்த முடிவு ஆகும் என்று நாளைய வரலாறு பதியக்கூடும்.

"திராவிட மாடல்" அரசின் நாயகர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நயத்தக்க அணுகுமுறைகள், நாளும் தி.மு.க. அணியை மேலும் மேலும் வளப்படுத்தி, வலுப்படுத்தி 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாறு காணாத இமாலய வெற்றி என்ற கொடியை வானளாவப் பறக்கவிடும் என்பதில் துளியும் அய்யமில்லை.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மயிலை கிழக்குப் பகுதி

சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் எஸ்.மணிகண்டன் இல்ல விழா!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ, – எஸ்.முரளி வாழ்த்து! மா.பா.அன்பு தலைமை!

சென்னை, ஆக 3-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் எஸ்.மணிகண்டனின் மகள் எம்.திரிஷாவின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன் இன்று (3.8.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6:30 மணியளவில் சென்னை 28, ஆர்.ஏ.புரம் சிருங்கேரி மடம் சாலையில் உள்ள மகிழ் கன்வென்ஷன் ஹாலில் நடைபெறுகிறது.

விழாவிற்கு 124(அ) வட்டக் கழக செயலாளர் மா.பா.அன்பு தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., என்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவிற்கு என்.எஸ். பாலசுப்பிரமணியன், ம. மாரிமுத்து, செந்தில்குமார், அய்யாவு, எம்.துரைக் கண்ணு, டி.எஸ்.விஷ்ணு சங்கர், பி.சார்லி, Wefas த. பத்மநாபன், கோ.வெங்கட்ராமன், லயன் பி.சக்திவேல், ஜி. ஹரி நாராயணன், மு.வேல் ராஜன், கே.எல்.சிவானந்தம், உ.யுவராஜ், எஸ்.ஜீவ ரத்தினம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் மயிலை பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, சிமென் கோ.சேகர், பி.எல். தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், மயிலை கிழக்கு மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ், அ.தவ நேசன், வி.வெற்றிவேல், கே.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, டி.ராஜ வேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் கீதாமுரளி எம்.சி.., அ.ரேவதி எம்.சி.., மாவட்டபிரதிநிதிகள் மூ.உதயசூரியன், வீ.அருண்குமார், என்.வி.லோகநாதன், மாவட்ட பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், என்.வடிவேல், ஜி.கே.கௌதம், கே.கண்ணன், சுட்டியேஜோதிகுமார், சே.விவேக்ராஜன், வே.ஹேமாத்குமார், இ.கோகுல், எஸ்.சீனு மற்றும் 124 அ வட்ட நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஆர்.கே.முருகன், இ.தணிகாசலம், எஸ்.பிரசாந்த், எம்.தமிம், பெனிக்ஸ், மகிமை, லூர்துசாமி, சந்துரு, அப்துல்லத்திப், சுகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில்

"நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

திருவள்ளூர் ஆக 03

நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 போன்ற சீர்மிகு திட்டங்களின் வரிசையில் நலம் காக்கும் ஸ்டாலின் என்னும் முழு உடல் பரிசோதனை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 இன்று சென்னை சாந்தோம் சென்ட் பீட்ஸ் மேல் நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்கள். இதனை தொடர்ந்து

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி, ஆவடி சோதனை சவாடி அருகில் உள்ள இம்மாகுலேட் இருதய மேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவ முகாம் நடைபெற்றது இதில்

சிருபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலை வகித்து நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்

இதனை தொடர்ந்து அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவிக்கையில்

இம்மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படும்.இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேரு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படும். மருத்துவர்களால் பரிந்துரைக்கப் படுபவர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்கோ, இ.சி.ஜி, எக்ஸ்ரே, கார்ட்டியோகிராம், பெண்களுக்கான கர்ப்பபைவாய் மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனைகள், அந்த முகாமிலேயே மேற்கொள்ளப்படும். முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பாக அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இம்முகாமில் பொது மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மருத்துவ சேவைகளை இலவசமாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 14 ஊரக வட்டாரங்களிலும் 42 முகாம்கலும், ஆவடி மாநகராட்சியில் 3 முகாம்கள் என மொத்தம் 45 முகாம்கள் வாரந்தோறும் நடைபெறவுள்ளது.

என தெரிவித்தார்

பின்னர், அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 50 கர்பினி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீர் பொருட்களை தனி சிறப்பாக எற்பாடு செய்து வழங்கினர். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனுக்கான சதவிகித அடையாள அட்டைக்கான ஆணைகளும், முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டைகளும் நோயாளிகளுக்கு வழங்கினர்

இந்நிகழ்வில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், ஆவடி மாநகராட்சி துணை மேயர் சூரியகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, ஜி.ராஜேந்திரன், வி.அம்மு, பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள்

அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்

சென்னை, ஆக. 3 - 20252026 ஆம் ஆண்டிற்கான வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கென தமிழக அரசு ரூ.38.00 கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்து அதன்படி சென்னை பெருநகர எல்லைக்குள், 15 மண்டலங்களில் 78 பணிகளும், சென்னை புறநகர் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 117 பணிகளும் தொடங்கி நீர்வளத் துறை மூலம் நடைபெற்று வருகிறது.

இதில் பக்கிங்காம் கால்வாயில் 19 பணிகளும், கூவம் ஆற்றில் 19 பணிகளும், அடையாற்றில் 5 பணிகளும், இதர 35 பணிகள் வரவு கால்வாய்கள், ஏரிகள், உபரி நீர் கால்வாய், மடுவு பகுதிகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகள், திடக் கழிவுகள், மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணிகள் 234 மிதக்கும் மண் கழிவு அகற்றும் இயந்திரங்களுடன் குப்பைகளை அகற்ற லாரிகளுடன் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுதவிர முட்டுக்காடு, புதுப்பட்டினம், கூவம், அடையாறு, எண்ணூர் மற்றும் பழவேற்காடு (Pulicat) முகத்துவாரங்களில் சேர்ந்துள்ள மணல் படிவுகள் அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் செப்டம்பர் 15 ஆம் தேதிக்குள் முடியும் வண்ணம் தீவிரப்படுத்தும் நோக்கில் நீர்வளத்துறை செயலர் ஜெ.ஜெயகாந்தன், முதன்மை தலைமைப் பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., பொறி. சு.கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொறி. சி.பொதுப்பணித்திலகம், பாலாறு வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர் பொறி.ம.மகேஸ்நாகராஜன், ஆரணியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்களுடன் தள ஆய்வு நேற்று மேற்கொண்டுள்ளார்.

மேலும், அனைத்து நீர்த் தேக்கங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்திற்கான கட்டிடங்களையும், கட்டுப்பாட்டு மையத்திற்கான மின் கணினி செயற்கைக்கோள் தகவல் கருவிகள் மற்றும் உபகரணங்களையும் ஆய்வு செய்தார்.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் - ஆர்.எஸ்.பாரதி ஆலோசனை!

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

ஆர்.சுந்தர்ராஜன் தலைமை! பகுதி செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஆக. 3 -

பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் .04.08.2025. திங்கட்கிழமை மாலை 5:00 மணியளவில் நங்கநல்லூர் எம் .ஜி.ஆர் ரோடில் அமைந்துள்ள ஹரிஹரன் மகாலில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சுந்தர்ராஜன் தலைமையில்,பகுதி நிர்வாகிகளான A.சாலமோன், R.பாபு, ராஜேஸ்வரி சத்யா,E. ரமேஷ் ஆகியோர் வரவேற்பில் நடைபெறும் செயல் வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களும் கலந்துக் கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA2), கழகத் தோழர்கள், இளைஞரணியினர், மகளிரணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்..

இவ்வாறு பகுதி செயலாளர் என்.சந்திரன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டலம், 51 & 52 ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ். ஆர்.ராஜா.எம்.எல்.ஏ உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாநகர மேயர் க.வசந்தகுமாரி,துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர் டி.காமராஜ் , மாமன்ற உறுப்பினர்கள் பா.லிங்கேஸ்வரி,எல்.பெரியநாயகம் ,வட்ட செயலாளர் ஸ்ரீதர்குமார் என்கிற பாபு,கா.மு.சூர்யா மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.